புரட்சிப்
# பெரியார் முழக்கம்



www.dvkperiyar.com

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு | ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | PURATCHI PERIYAR MUZHAKAM

• திருவள்ளுவர் ஆண்டு 2057 • ஜுலை (JULY) 09, 2026 • புரட்சி 26 • முழக்கம்(ISSUE) 28 • விலை(PRICE) ரூ.6.00

## உயிரற்ற பொருளிலிருந்து உயிரை உருவாக்கி விட்டனர் விஞ்ஞானிகள்

# விடைபெறுகிறது; கடவுள் சக்தி!

**உலகையும் உயிரையும் கடவுள் படைத்தார் என்ற நம்பிக்கையை அறிவியல் தகர்த்து வருகிறது. செயற்கையாக உயிரை உண்டாக்கும் முயற்சிகளில் விஞ்ஞானிகள் முன்னேறி வருகிறார்கள். 2010-ம் ஆண்டு மே 20-ம் தேதி அமெரிக்காவின் கிரேக்வென்டன் என்ற விஞ்ஞானி ஒரு நுண்ணுயிரிக்குள் (பாக்டீரியா) அதன் டி.என்.ஏ-க்களை அகற்றி கூட்டுக்குள் செயற்கையாக உருவாக்கிய மரபணுவை திணித்து செயற்கை உயிரை உண்டாக்கினார். இதற்கு 'சிந்தடிக்' என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது உயிரற்ற ஜட பொருளிலிருந்து உயிரை உண்டாக்கி விட்டார்கள் விஞ்ஞானிகள். கடவுள் முற்றாக விடுவிக்கப்பட்டது. இது பற்றி 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில நாளேடு கடந்த ஜுன் 30-ம் தேதி எழுதியுள்ள தலையங்கம்:**


are like eggs at present. And you
indefinitely being just an ordinary, dec
We must be hatched or go bad
- CS LEWIS

Not Playing God

Scientists can make a cell from scratch now. That's a useful tech for solving many global problems

Nature took more than 500mn years to make the first cell, and a few billion to arrive at intelligence thereafter. But we humans have cobbled together both in fewer than 50. Of AI we needn't say more, but news from University of Minnesota, about world's first *totally* synthetic cells, is exciting. It questions the belief that life is more than molecules plus energy. But looks like there's no secret sauce, no supernatural hand.

Sceptics may roll their eyes. It's true that, despite all the hype, A
not really "intelligent" but only a statistical trick. And yes, the le
ntist on the synthetic cell team has said she's "hesitant to
live'". But hesitation only shows she doesn't want to o
n's achievement, unlike AI bros. The SpudCells t
all three conditions to be considered aliv
eplicating. What's the catch? The cell
es or components that make

*இப்போது விஞ்ஞானிகள் ஒரு செல்லை பூஜ்ஜியத்திலிருந்து உருவாக்க முடிகிறது. இது பல உலகளாவிய பிரச்சினைகளைத் தீர்க்க உதவும் பயனுள்ள தொழில்நுட்பமாகும்.*

*இயற்கை முதல் உயிரணுவை (cell) உருவாக்க 500 மில்லியனுக்கும் அதிகமான ஆண்டுகள் எடுத்தது. அதன் பிறகு இந்த செல்லுக்கு அறிவாற்றல் (intelligence) உருவாக இன்னும் சில பில்லியன் ஆண்டுகள் ஆனது. ஆனால் மனிதர்கள் இந்த இரண்டையும் 50 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்தில் ஒன்று சேர்த்துவிட்டனர். மினசோட்டா பல்கலைக்கழகத்தில் உருவாக்கப்பட்ட உலகின் முதல் முழுமையாக செயற்கையாக உருவாக்கப்பட்ட செல்கள் (totally synthetic cells) மிகவும் பரபரப்பூட்டும் சாதனையாகும்.*

*இந்த கண்டுபிடிப்பு, "உயிர் என்பது மூலக்கூறுகளும் (molecules) ஆற்றலும் (energy) மட்டுமல்ல; அதற்கு மேல் ஏதோ ஒரு சக்தி உள்ளது" என்ற நம்பிக்கையையே தகர்த்துவிட்டது. இப்போது பார்க்கும்போது, இதில் எந்த மர்மமான "ரகசியச் சாறு" (secret sauce) அல்லது இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்தியின் தலையீடும் இருப்பதாகத் தெரியவில்லை. அதாவது உயிரை எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட கடவுள் சக்திதான் உருவாக்கியது என இனி கூறமுடியாது. சந்தேகம் கொண்டவர்கள் இதைக் கேட்டு கண்களை உருட்டலாம்.*

*அவர்கள் உருவாக்கிய SpudCells உயிருள்ள ஒன்றாகக் கருதப்பட வேண்டிய மூன்று அடிப்படை நிபந்தனைகளையும் பூர்த்தி செய்கின்றன. உணவை உட்கொள்கின்றன, வளர்கின்றன, மேலும் தங்களைப் பிரதியெடுக்கின்றன (replicate). இந்த செல்களால் தங்களுக்குத் தேவையான புரதங்களை (proteins) உருவாக்கும் ரைபோசோம்கள் (ribosomes) அல்லது அவற்றின் கூறுகளைத் தாங்களே உருவாக்க முடியாது. அது பரவாயில்லை. இப்போது இந்தத் திட்டம் பல ஆய்வகங்கள் இணைந்து செயல்படும் ஒரு பெரிய கூட்டுத் திட்டமாக வளர்ந்து வருவதால், இன்னும் மேம்பட்ட செயற்கை செல்கள் உருவாக்கப்படும். மினசோட்டா குழு தங்களது தொழில்நுட்பத்திற்கு காப்புரிமை (patent) பெறாமல் இருப்பதை பாராட்ட வேண்டும். அதனால் உலகம் முழுவதும் உள்ள பிற ஆராய்ச்சியாளர்களும் இதை மேலும் மேம்படுத்த முடியும்.*

*மே மாதத்தில், சீனா, ஜப்பான், தென் கொரியா, சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் மலேசியா ஆகிய ஆறு ஆசிய நாடுகள், செயற்கை செல்களை உருவாக்குவதற்கான 10 ஆண்டு கூட்டு திட்டத்தை அறிவித்தன. அதன் முக்கிய இலக்குகளில் ஒன்று "ரைபோசோம் தன்னாட்சி" (ribosome autonomy) என்பதாகும். இந்த முயற்சியில், மேற்கத்திய நாடுகளும் கிழக்கத்திய நாடுகளும் அரசியல் வேறுபாடுகளை ஒதுக்கிவைத்து, மனிதகுலத்தின் நலனுக்காக இணைந்து செயல்பட வேண்டும்.*

*செயற்கை உயிர் மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்காது என்பதை உறுதியாகச் சொல்ல முடியும். 1999-ஆம் ஆண்டு மறைந்த கிரேக் வென்டர் (Craig Venter) ஒரு செயற்கை உயிரணுவை உருவாக்கப் போவதாக அறிவித்தபோது, அவர் "பிராங்கன்ஸ்டைன் போல கடவுளின் வேலையைச் செய்கிறார்" என்று குற்றம் சாட்டப்பட்டார். அதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு, டாலி (Dolly) என்ற செம்மறியாட்டை குளோனிங் செய்ததற்காக, ரோஸ்லின் இன்ஸ்டிடியூட் விஞ்ஞானிகளும் இதே குற்றச்சாட்டை எதிர்கொண்டனர்.*

*புதிய விஷயங்களைப் பற்றிய பயம் இயல்பானதே. ஆனால் அதனால் அறிவியல் முன்னேற்றத்தை நாம் கைவிட முடியாது. குறிப்பிட்ட பண்புகளைக் கொண்ட செல்களை வடிவமைக்கும் தொழில்நுட்பத்தை நாம் முழுமையாகக் கற்றுக்கொண்டால், உதாரணமாக வளிமண்டலத்தில் உள்ள கார்பன் டைஆக்சைடையும் நீராவியையும் எத்தனால் (ethanol) ஆக மாற்றும் செல்களை உருவாக்க முடியும். அப்போது உலக வெப்பமயமாதலும் (global warming), எரிபொருள் பிரச்சினைகளும் கடந்த கால வரலாறாகிவிடும்.*

*இயற்கை கோடிக்கணக்கான ஆண்டுகளில் உருவாக்கிய பில்லியன் கணக்கான நுண்ணுயிரிகளிலேயே இப்படிப்பட்ட ஒன்றைக் கண்டுபிடிப்பதைவிட, அதை நாம் நேரடியாக வடிவமைப்பது மிகவும் எளிது. விஞ்ஞானி வென்டரின் குழு இயற்கையில் இருக்கும் ஒரு பாக்டீரியாவை அடிப்படையாகக் கொண்டு ஒரு செயற்கை உயிரணுவை உருவாக்கியிருந்தது. அதற்கு 16 ஆண்டுகளுக்குப் பிறகு, மினசோட்டா விஞ்ஞானிகள் முற்றிலும் புதிதாக, பூஜ்ஜியத்திலிருந்து ஒரு செல்லை உருவாக்கியுள்ளனர். இது படிப்படியாக நடைபெறும் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும்.*

*செயற்கை நுண்ணறிவு (AI) உதவியுடன், அடுத்த பத்து ஆண்டுகள் இன்னும் அதிக சாதனைகளைப் படைக்கும் வாய்ப்பு உள்ளது. ஒரு புதிய "உயிரணு யுகம்" (Cellular Age) இப்போது தொடங்குகிறது.*

# பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தராக பட்டியல் இனத்தவரை நியமிக்க வேண்டும்!

**இதுகுறித்து கழகத் தலைவர் தோழர் கொளத்தூர் மணி அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கை :**

*சேலம், பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் நிருவாகக்குழுவில் மாற்றங்கள் செய்ய அரசு தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிகிறோம். இவ்வேளையில் பெரியார் பல்கலைக்கழகச் சட்ட விதிகளின்படி பணிமூப்பில் முதல்நிலையிலுள்ள பேராசிரியர் ஒருவரைத் துணைவேந்தர் பொறுப்பில் நியமனம் செய்யலாம் என்ற விதிப்படி பணிமூப்பில் முதலாவதாகவுள்ள பட்டியலினப் பேராசிரியரைப் பொறுப்புத் துணைவேந்தராக நியமிக்க வேண்டுகிறோம். பல்கலைக்கழகம் தொடங்கப்பட்ட 25 ஆண்டுகளில் ஒரே ஒருமுறை மட்டுமே பட்டியலினப் பேராசிரியர் ஒருவர் துணைவேந்தராக இருந்துள்ளார். எனவே, இடைக்கால ஏற்பாடாக அரசு தற்போது துணைவேந்தர் பணிகளைக் கவனிக்க பட்டியலினப் பேராசிரியரைப் பொறுப்புத் துணைவேந்தராக நியமிக்க வேண்டும். அதுவே சமூகநீதியாகும்.*



*சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் பத்தாண்டுகளுக்கும் மேலாக நீடித்த ஒரே ஜாதியின் ஆதிக்கம் முடிந்து, துணைவேந்தர் நிருவாகக்குழு அமைக்கப்பட்டுக் கடந்த ஓராண்டாக நிருவாகக்குழு பல்வேறு பாராட்டத்தக்க சமூகநீதி சார்ந்த செயல்பாடுகளை முன்னெடுத்தது. மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை துறைத்தலைவர் மாற்றம், முனைவர் பட்ட ஆய்வு மாணவர் சேர்க்கையில் இட ஒதுக்கீடு, முனைவர் பட்ட ஆய்வேடு சமர்ப்பிப்பதிலிருந்த இடர்ப்பாடுகள் களைதல், அனைவருக்கும் நிருவாகப் பொறுப்புகள் என நிருவாகக்குழுவின் பணிகள் சிறப்பாகவே இருந்தன. இந்நிலையில் தற்போதுள்ள நிருவாகக்குழுவை அரசு மாற்ற உள்ளதாக அறிகிறோம். அதில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாக பல்கலைக்கழகத்தில் ஆதிக்கம் செலுத்திய ஒரு குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு சர்ச்சைகளுக்குப் பெயர்போன, ஆர்.எஸ்.எஸ். பின்புலம் கொண்ட பேராசிரியர் ஒருவர் அப்பதவிக்கு வர தீவிரம் காட்டி வருவதாக அறிகிறோம். அப்படியான முயற்சிக்கு உயர்கல்வித்துறை துணைபோகக் கூடாது. மேலும், அந்தச் சர்ச்சைக்குரிய பேராசிரியர் இந்தப் பதவியைக் குறிவைத்து நிருவாகத்திற்கு எதிராகப் பல்வேறு செயல்பாடுகளை நடத்தி வந்ததாகவும் கூறப்படுகிறது. பதவியைக் குறிவைத்தே அவர் இப்படியான செயல்பாடுகளை முன்னெடுத்துள்ளாரோ என்ற சந்தேகம் வலுப்பெறுவதாகக் கூறப்படுகிறது. தற்போதுள்ள நிருவாகக்குழுவில் மாற்றம் செய்யும்போது இது போன்ற சர்ச்சைக்குரிய நபர்களுக்கு அரசு இடமளிக்கக்கூடாது.*

*மேலும், பல்கலைக்கழக விதிகளின்படி மூத்தப் பேராசிரியரைத் துணைவேந்தர் பொறுப்பாக நியமிக்க வேண்டும். அதற்கான நல்வாய்ப்பாகப் பல்கலைக்கழகத்தின் மூத்தப் பேராசிரியராகப் பட்டியலினப் பேராசிரியரே பணிமூப்பில் முதலிடத்தில் உள்ளார். அவர் நாடறிந்த அறிவியலாளராகவும், நிருவாகியாகவும் இருந்துள்ளார். எனவே, அரசு உடனடியாகப் பட்டியலினப் பேராசிரியரைப் பெரியார் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொறுப்பில் நியமிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.*

**- கொளத்தூர் மணி,**
**தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.**
*05.07.26*

தலையங்கம்

## சூழ்ச்சிகர பாஜக அரசியல்

ஜெயலலிதா மறைந்த உடன் அக்கட்சியை இரண்டாக உடைத்து மாறி மாறி உதவிகளை செய்து அதிமுகவின் ரிமோட் கண்ட்ரோலை தன்வசம் வைத்துக் கொண்டது ஒன்றிய பாஜக ஆட்சி. திமுக எதிர்ப்பு என்ற ஒரே கொள்கையோடு எம்.ஜி.ஆர் உருவாக்கிய அஇஅதிமுக திராவிட இயக்கத்தின் கொள்கை அடையாளங்களை படிப்படியாக கைவிட்டு அதிகார அமைப்பாக மட்டும் மாறியது.

இந்துத்துவா உணர்வில் ஊறிப்போன ஜெயலலிதா சமூக நீதி மற்றும் மாநில உரிமை என்ற இரண்டு அடையாளங்களை உறுதியாக பின்பற்றி வந்தார். எடப்பாடி பழனிச்சாமி அந்த அடையாளங்களையும் தனது பதவி அதிகாரத்துக்காக கைவிடத் துணிந்தார். ஒன்றிய பாஜக ஆட்சி கொண்டு வந்த அனைத்து மாநில உரிமைப் பறிப்பு சட்டங்களுக்கும், இந்துத்துவ சட்டங்களுக்கும் அஇஅதிமுக பச்சைக்கொடி காட்டியது. முதல்வர் பதவிக்காகவும், கட்சித் தலைமை பதவிக்காகவும் எஞ்சி இருந்த கொள்கை அடையாளங்களையும் எடப்பாடி காவு கொடுத்ததன் விளைவுகளைத்தான் இன்று பார்க்கிறோம். கொள்கை அடையாளங்களை இழந்து பதவி அதிகாரங்களுக்காகவே கட்சி மாறிப் போனதால் இன்று வேகம் வேகமாக அஇஅதிமுக கரைந்து கொண்டிருக்கிறது. கொள்கை அடையாளம் இருந்திருந்தால் இந்த சீரழிவுகள் நடந்திருக்காது!

தமிழ்நாட்டில் திராவிட கட்சிகளை வீழ்த்துவதன் மூலம் தான் இந்துத்துவ சக்திகள் காலூன்ற முடியும் என்று பாஜக உருவாக்கிய சதியை இப்போது தெரிந்தோ அல்லது தெரியாமலோ விஜய் கட்சி வேகம் வேகமாக செயல்படுத்தி வருகிறது. கடும் ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகி வழக்குகளை சந்தித்துக் கொண்டிருக்கும் பலரையும் தூய சக்தியாக தனக்குத் தானே அறிவித்துக் கொண்ட விஜய் கட்சி இருகரம் கூப்பி விருந்து வைத்து வரவேற்று கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இதற்காக அந்தக் கட்சி வெட்கப்படவில்லை! பாஜகவின் கனவுத் திட்டப்படி அஇஅதிமுக கரைந்து கொண்டிருப்பது உண்மையில் கவலைக்குரியது; வலிமையான கட்டமைப்பைக் கொண்ட கட்சியாக அது இருந்தது. இப்போது பதவிக்கு வந்திருக்கும் தவெகவுக்கு கட்சிக் கட்டமைப்பே இல்லை. கட்சியினருக்கும் விஜய் பிம்ப மாயை என்ற ஒன்றைத் தவிர வேறு எந்தக் கொள்கை அடையாளமும் இல்லை! சில அமைச்சர்கள் மட்டும் கொள்கைகளைப் பேசுகிறார்கள்; அதன் உறுதியும் நம்பகத் தன்மையும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. கொள்கைகளில் உறுதிவேண்டும் என்றே நாம் எதிர்பார்க்கிறோம்!

அனைத்து மாநிலங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் ஒன்றிய பாஜக ஆட்சி கொண்டு வந்து விட்டது. தன் கைவசம் இருக்கும் சி.பி.அய் அமலாக்கத்துறை உருட்டல் மிரட்டல்கள் அத்தனையையும் ஆயுதங்களாகப் பயன்படுத்துகிறது. இந்த உருட்டல் மிரட்டல்களுக்கு திராவிட மாடல் ஆட்சி நடத்திய மு.க.ஸ்டாலின் போல் தவெக உறுதியாக எதிர்த்து களமாடும் என்பதற்கான அறிகுறிகள் இல்லை. பாஜகவின் மாநில கட்சி முகமாக அண்ணாமலை களம் இறங்கி இருக்கிறார். இந்த பின்னணியில் தமிழ்நாட்டின் தனித்துவமான சமூக நல்லிணக்கம், இந்துத்துவ அரசியல் எதிர்ப்பு அடையாளங்கள் கடும் நெருக்கடிக்களுக்கு உள்ளாகியிருக்கிறது.

கடும் விமர்சனங்கள் இருந்தாலும் திராவிட இயக்க இலட்சியம் என்ற உறுதியான அடையாளத்துடன் செயல்படும் ஒரே இயக்கம் திமுக மட்டும் தான்! கட்சி கட்டமைப்பில் ஊடுருவி இருந்த குறைபாடுகளை சரி செய்யும் முயற்சிகளில் திமுக இப்போது இறங்கி இருக்கிறது. அதிகாரத்தை இளைஞர்களிடம் மாற்றும் முயற்சிகள் நடப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும்! சூழல் நெருக்கடிக்களுக்கு ஏற்ப திமுகவின் அரசியல் பாதை திசைதிரும்பி விடக்கூடாது என்பதையும் சுட்டிக்காட்டுவது நமது கடமை. திசைதிரும்பாது என்ற நம்பிக்கை நமக்கு உண்டு.

பாஜகவின் தற்காலிக ஊடுருவலைத் தடுக்க விஜய் ஆட்சிக்கு இடதுசாரிகளும் விடுதலைச் சிறுத்தைகளும் ஆதரவுக் கரம் நீட்டியது. வரவேற்கத்தக்கதுதான்! அதற்காக திமுகவின் மாற்றாக தவெக உருவெடுத்து இருப்பது போல் ஒரு பிம்பத்தை உருவாக்குவதும் அந்த அடிப்படையில் திமுக மீது கண்டனங்களைத் தெரிவிக்க வாய்ப்புகளைத் தேடி நிற்பதும் விரும்பத்தக்கது அல்ல.

பாஜகவின் ஒடுக்குமுறை அரசியலை எதிர்த்து துணிந்து களமாடிய ஒரே கட்சியான திமுகவைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளில் இறங்குவது மறைமுகமாக பாஜகவுக்கு தமிழகத்தில் களம் அமைத்து தரும் ஒரு செயல்பாடு என்பதை உண்மையான பாசிச எதிர்ப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஆட்சி அமைக்கும் வலிமையும் கட்டமைப்பும் உள்ள ஒரே கட்சி திமுக தான். ஜெயலலிதா ஆட்சியைப் போல் பழிவாங்கும் அரசியலை முற்றாகப் புறந்தள்ளி ஆக்கபூர்வமான வளர்ச்சி அரசியலை முன்னெடுத்தார் முதல்வராக இருந்த மு.க ஸ்டாலின்.

இப்போது இந்த ஆட்சி பழிவாங்கும் அரசியலைத் தொடங்கி விட்டது. 41 உயிர்களைக் கரூர் கூட்ட நெரிசலில் பறிகொடுத்தது, அப்போதே இதற்கு காரணமான ஆனந்தையும் விஜய்யையும் மு.க.ஸ்டாலின் அடுத்த நாளே கைது செய்திருக்கலாம்; ஆனால் அதை அவர் செய்யவில்லை; மாறாக எந்த ஒருகட்சித் தலைவரும் தனது தொண்டர்கள் இறப்பதை விரும்ப மாட்டார் என்று பெருந்தன்மையோடு பேசினார். இப்போது திமுக மீது மனசாட்சி இன்றி குற்றம் சாட்டுகிறார்கள்; சவால் விடுகிறார்கள் இதுதான் இவர்கள் நடத்தும் அரசியலின் தரம்!

அப்போது விஜயைக் கண்டித்த கட்சிகள் இப்போது இந்தப் பிரச்சனையின் பழிவாங்கும் படலம் துவங்குகிறபோது அதை எதிர்க்காமல் வாய் மூடி மவுனம் சாதிப்பது ஏன் என்ற கேள்வியையும் எழுப்ப வேண்டியிருக்கிறது. அஇஅதிமுக இடத்தில் தவெகவை நிறுத்தி அதன் வலிமையற்ற கட்டமைப்பை எந்த நேரத்திலும் சீர்குலைத்து அந்த இடத்தில் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளும் சூழ்ச்சிகரமான பாஜக அரசியலை உண்மையான இந்துத்துவ அரசியல் எதிர்ப்பாளர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஆண்மையும் பெண்மையும் வேண்டாம்!

### பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபடுவதற்கு பெரியார் முன்வைத்த கருத்துகள்:

★ காது குத்துவது பெண்களை அடிமைப்படுத்துவதற்குத்தான். உடலில் மூக்கு, காதுகளில் ஓட்டை போட்டு நகைகளை மாட்டி விட்டால் ஆண்களின் வன்முறையை எதிர்த்து திருப்பி அடித்து விடக்கூடாது என்பதற்குத் தான் இந்தச் சடங்குகளை உருவாக்கினார்கள்.

★ பெண்கள் முடியை கத்தரித்துக் கொண்டு கிராப் வைத்துக் கொள்ள வேண்டும்; பெண்களின் கூந்தல் அழகை புலவர்கள் வர்ணிப்பார்கள். செயற்கை மணமா? இயற்கை மணமா? என்று ஆராய்ச்சி செய்கிறார்கள் கணவன் மனைவியைத் தாக்குவதற்கு கூந்தலைப் பிடித்து தாக்குகிறான். நீண்ட முடி பெண் சுதந்திரத்துக்கு தடை!

★ நகை அணியக் கூடாது; பெண்கள் அலங்கார பொம்மைகளாக மாற்றப்படுகிறார்கள். நகை அணிவதால் உயிருக்கே ஆபத்து ஏற்படுகிறது. உலக நாடுகளில் பெண்கள் நகை அணிவதில்லை. அளவுக்கு மீறி நகை அணிந்தால் தண்டனை அல்லது வரி விதிக்க வேண்டும்; நகை அணிவதில் அழகு இல்லை!

★ நன்கு படித்துவிட்டு திருமணத்துக்குப் பிறகு பெண்கள் வீட்டு வேலை செய்வதை அனுமதிக்கக் கூடாது. ஒரு பெண்ணைப் படிக்க வைத்து விட்டு ஒருவன் கையில் பிடித்துக் கொடுக்கவும், குழந்தை வளர்க்கவும், நகை அணியும் அலங்காரங்களுடன் மக்கள் கவனத்தை ஈர்க்கவும் செய்தால் படிக்க வைத்த பணம் வீண் என்பதோடு, அது தேசிய குற்றமும் ஆகும்.

★ அழகு உணர்வு வேண்டாம் என்று கூறவில்லை; அது எளிமையாக இருக்க வேண்டும்.

★ பெற்றோர்கள் தங்கள் பெண்களை பெண் என்று அழைக்காமல் ஆண் என்றே அழைக்க வேண்டும். ஆண்கள் பெயரை சூட்ட வேண்டும். உடைகளையும் ஆண்களைப் போலவே உடுத்த வேண்டும். உலகத்தில் ஆணா பெண்ணா என்று கண்டுபிடிக்காத மாதிரி உடை அணிய வேண்டும்.

★ பெண்களைக் காவல்துறையிலும், இராணுவத்திலும் சேர்க்க வேண்டும். பெண்கள் படிப்பதையே ஆச்சரியமாக பார்த்தார்கள். சைக்கிள், ஓட்டுவதை வேடிக்கையாகப் பார்த்ததார்கள்; பிறகு பழகிவிட்டது! அதேபோல் பெண்கள் கையில் துப்பாக்கியை கொடுப்பதையும் மக்கள் காலப்போக்கில் ஏற்றுக் கொள்வார்கள்.

★ ஆண்கள் பெண்கள் உடையில் பாகுபாடு கூடாது; பெண்கள்-ஆண்கள் உடையை அணிய வேண்டும். பெண்களுக்கே உருவாக்கப்பட்ட உடைகள் அவர்கள் சுதந்திரத்தைப் பறிப்பதற்காகவே உள்ளன.

★ பெண்கள் தங்கள் வாழ்க்கை முறையாக நடத்தக் கூடிய அளவுக்கு ஊதியம் பெறும் வகையில் படிக்க வைக்க வேண்டும்.

★ பெண்களும் ஆண்களும் ஒன்றாக படிக்க வேண்டும். ஆண்கள் படிக்கும் பள்ளிகளில் பெண்களை ஆசிரியர்களாக்க வேண்டும்.

★ பெண்களுக்கு கும்மியும், கோலாட்டமும், தையலும் தான் கற்பிக்க வேண்டும் என்ற நிலையை மாற்ற வேண்டும்.

★ தங்கள் கணவர்களைப் பெண்களே தேர்வு செய்ய வேண்டும்; அதைப் பெற்றோர்கள் அனுமதிக்க வேண்டும்.

★ பெற்றோர்கள் பார்த்து செய்யும் திருமணம் ஒழிய வேண்டும்.

★ தாலி கட்டுவதை நிறுத்த வேண்டும்; பெண்களை ‘முண்டச்சி’ ஆக்குவதற்கும், சகுனத் தடையாக்கவும், ஆண்கள் பெண்களை மிரட்டவும், அடிமைத்தனத்தை நிலை நிறுத்தவும் மட்டுமே தாலி பயன்படுகிறது.

★ நகை-தாலி-சடங்கு இல்லாமல் நடக்கக்கூடிய திருமணம் மட்டுமே சுயமரியாதைத் திருமணம் ஆகிவிடாது! பெண்களுக்கு சொத்தில் ஒரு பங்கு தர வேண்டும்!

★ ஆணும் பெண்ணும் சேர்ந்து பெற்றெடுப்பது தான் பிள்ளை. ஆனால் பிள்ளையை தகப்பன் அடையாளத்தோடு தான் கூறுகிறார்கள். தந்தை என்பது ஒரு உத்தேசம்தான். 10-மாதம் சுமந்து பெற்றெடுக்கும் தாய் அடையாளமே உறுதியானது.

★ குழந்தை பெறுவதை ஒன்று இரண்டோடு கட்டுப்படுத்த வேண்டும். குழந்தைகள் இல்லாமல் இருப்பது சுதந்திரமான வாழ்க்கை.

★ மனிதன் ஒழுக்கம் கெடுவதற்கே காரணம் இந்த பிள்ளை குட்டிகளைப் பெற்றுக் கொள்வதுதான்.

★ பெண்கள் விடுதலைக்காக பொதுவெளிக்கு வருகிறவர்கள் இந்து மத சாஸ்திரத்தையும், புராணங்களையும் விலக்கி வைத்து விட்டுத்தான் வரவேண்டும்.

★ பெண்களை அடிமைப்படுத்தும் கொடுமை ஒழியவில்லையானால் திருமணமே கட்டாயம் குற்றமாக்கப்பட வேண்டும்.

★ இப்போது பொது ஒழுக்கமும் பொதுக் கட்டுப்பாடும் எப்படி இருக்கிறது: ‘நான் திருடுவது குற்றமல்ல; நீ திருடுவது தான் குற்றம்; நான் பொய் சொல்வது குற்றமல்ல; நீ பொய் சொல்வது தான் குற்றம்” என்ற பார்வையில் இருக்கிறது. இது ஒருபோதும் பொது வாழ்க்கைக்கு சமத்துவத்துக்கும் சுதந்திரத்திற்கும் சிறிதும் பயன்படாது.

***(பூந்தமல்லியில் நடந்த வான்மதி- கந்தசாமி இணையேற்பு விழாவில் கழகப் பொதுசெயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையிலிருந்து..)***

# பெண்களுக்கு இலவச விடுதி நடத்திய நாத்திகர்

***வரலாற்றுப் பதிவுகள் இல்லாத எத்தனையோ போராட்டங்களை பெரியார் இயக்கம் நடத்தி இருக்கிறது. உள்ளூர் மட்டத்தில் நடந்த அந்த சமூகப் புரட்சிகளை, கருஞ்சட்டை வீரர்களை வெளிச்சப்படுத்தும் கட்டுரைத் தொடரை முரசொலியில் ஊடகவியலாளர் ர.பிரகாசு எழுதி வருகிறார். பெரியார் பெருந்தொண்டர் செ.தெ.நாயகம். குறித்து விவரிக்கிறது இக்கட்டுரை.***

“கண்ணை மூடிக்கொண்டு, பெரியாரைப் பின்பற்றியவர் இவர். பெரியாருக்கும் அவருக்கும் எந்த விஷயத்திலும் ஒன்று போலவே கருத்து உதிக்கும். பெரியார் கருத்தைச் சொல்லிவிட்டால், பெரியாருக்கு மேலாக அதை விளக்கிச் சொல்லுவார். அதற்கு ஆதாரங்கள் விநாடியில் சேகரித்து விடுவார். எந்தப் பதவியும் உத்தியோகமும் செய்யும் தொண்டும் தமிழ் மக்களுக்குப் பயன்படுத்தப்பட முடியாவிட்டால், அது எவ்வளவு பெரிதாயினும் திரும்பிப்பாரார். மிகவும் கண்ணியமானவர். வேஷத்துக்கு என்று நடக்கும் காரியம் அவரிடம் இருந்ததில்லை” என்று 16.12.1944-இல் குடி அரசு இதழில், பாராட்டப்பட்ட பெரியார் பெருந்தொண்டர் செ.தெ.நாயகம். தான் சென்ற ஊரையெல்லாம், வாழ்ந்த பகுதியையெல்லாம் பெரியார் மண்ணாக ஆக்கிட பாடுபட்ட பகுத்தறிவாளர் அவர். அன்றைய நெல்லை மாவட்டம்-இன்றைய தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள குலசேகரப்பட்டினத்தை அடுத்த செட்டிகுளத்தில் நெல்லை நாயகம்- வள்ளியம்மை இணையருக்கு 07.10.1878-இல் பிறந்தவர் செ.தெ.நாயகம். குலசேகரப்பட்டினத்தில் உள்ள பள்ளியில் 12 வயது வரையும், பின்னர் பள்ளி இறுதி வகுப்பு வரை பாளையங்கோட்டையிலும் படித்தார். தாயம்மாள் என்பவரை மணம் முடித்து, 1901-ஆம் ஆண்டில் பெண் குழந்தை பிறந்த நிலையில், அடுத்த சில மாதங்களிலேயே தாயம்மாள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனார்.




குடும்பத்தினர், பெரியோர்களின் வற்புறுத்தலில் அடுத்த ஆண்டில் தமிழ்ப்புலவர் இ.பொ. ஈசுவரமூர்த்தியின் மகள் சிதம்பரவடிவு அம்மையாரை மணம் முடித்தார். கல்விப்பணியில் இருந்துதான் அவரது பொதுச்சேவை தொடங்கியது. தாயம்மாளின் நினைவாக, 1904-ஆம் ஆண்டில் குலசேகரப்பட்டினத்தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். அப்போது அவருக்கு வயது 26. எளிய மக்களின் கல்விக்காக கட்டணம் இல்லாமல், உணவு கொடுத்தும் இந்தச் சேவையைப் புரிந்தார். அதன்பிறகு, தன் தாய் வள்ளியம்மையார் பெயரில், ‘சிறார் இல்லம்’ ஒன்றைத் தொடங்கினார். வெளியூரில் இருந்து மாணவிகள் வந்து தங்கிப்படிக்க, இந்தச் சிறார் இல்லம் அன்றைக்குப் பேருதவி புரிந்தது. அதிலும் குறிப்பாக உணவு, கல்வி, இருப்பிடம் என அனைத்துமே இலவசமாக அங்கு வழங்கப்பட்டன.

1909-இல் சென்னை எழும்பூருக்குக் குடிபெயர்ந்த நாயகம் ஆசிரியர் பயிற்சி முடித்து, சென்னையிலேயே பணியாற்றத் தொடங்கினார். அந்தக் காலத்தில் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்களில் கூட ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடம் மறுக்கப்பட்டதைக் கண்டு வேதனையடைந்த நாயகம், 1933-இல் ‘தியாகராய நகர் பள்ளி’யைத் தொடங்கினார். குலசேகரப்பட்டினத்தில் மனைவி பெயரிலும், தாய் பெயரிலும் பள்ளியைத் தொடங்கியவர், சென்னையில் நீதிக்கட்சித் தலைவர் தியாகராயர் பெயரில் உருவான ஊரில், அந்தப் பெயரிலேயே பள்ளியைத் தொடங்கினார். அதுவும் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி உரிமைகள் பறிபோவதைக் கண்டு வெகுண்டெழுந்து தொடங்கினார். ஏனெனில், அப்போது அவர் நீதிக்கட்சியின் கொள்கைகளால் வெகுவாக ஈர்க்கப்பட்டு, அரசியல்மயமாகியிருந்தார். இங்கும் ‘தியாகராயர் இல்லம்’ ஒன்றைத் தொடங்கி, மாணவர்களுக்கு உணவு மற்றும் இருப்பிடத்தை இலவசமாக வழங்கினார்.

ஆச்சரியம் என்னவெனில், தாயம்மாள் நடுநிலைப்பள்ளி, வள்ளியம்மை மேல்நிலைப் பள்ளி, தியாகராய நகர் பள்ளி, வள்ளியம்மை கல்லூரி என செ.தெ.நாயகம் 120 ஆண்டுகளுக்கு முன் விதைத்த விதைகள்யாவும், ஆலமரமாக வளர்ந்திருக்கின்றன. அதன் கல்விச்சேவைகள் இன்றும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன. கல்விச்சேவை மட்டும் அவருடைய வரலாறு அல்ல. நீதிக்கட்சியின் மூலம் பெரியாரோடு நட்பை வளர்த்து, அரசியல் களத்திலும் தவிர்க்க முடியாத பங்காற்றியுள்ளார் செ.தெ.நாயகம்.

1919-இல் திருவல்லிக்கேணி கூட்டுறவுப் பண்டக சாலையின் செயலாளராகப் பணியில் இணைந்தார் செ.தெ.நாயகம். 1921-இல் கூட்டுறவுத் துறையின் துணைப் பதிவாளராகப் பொறுப்பேற்று, 13 ஆண்டுகள் அந்தப் பணியில் நீடித்தார். பணிக்காலத்தில், பல புதிய கூட்டுறவுச் சங்கங்களை உருவாக்கி, ஏற்கெனவே இருந்த சங்கங்களின் தரத்தை மேம்படுத்தினார். நீதிக்கட்சிக் காலத்தில், வகுப்புவாரி உரிமை முதன்முதலாக அமலானது, இவரது துறையில்தான் என்பது வரலாறு. வேலூரில் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளி சரிவர இயங்காமல் இருந்ததால், அதன் முதல்வராக செ.தெ.நாயகம் நியமிக்கப்பட, ஆறு மாதங்களில் சரிசெய்தார்.

நீதிக்கட்சியின் மீதும் சுயமரியாதை இயக்கத்தின் மீதும் இவர் கொண்டிருந்த பற்று மிகத் துய்மையானது. இந்தக் கொள்கைப் பாதையில்தான் தன் வாழ்க்கையையும் அமைத்துக்கொண்டார். ஓய்வுபெற்ற பின்னர், முழுநேரமாகவே அரசியல் பணிகளில் ஈடுபடத் தொடங்கினார். தன் மனைவி, குழந்தைகளை நீதிக்கட்சி மாநாடுகள், கூட்டங்களில் பங்கெடுக்கச் செய்தார். அந்த வகையில், 1933-இல் ஈரோட்டில் நடந்த கோவை மாவட்டச் சுயமரியாதை இயக்கப் பெண்கள் மாநாட்டிற்குத் தலைமை வகித்தவர் சிதம்பரத்தம்மையார். 1934-இல் ‘சுயமரியாதை இளைஞர் மன்ற’த் தலைவரானார். 1935-ஆம் ஆண்டு தேர்தலில் நீதிக்கட்சி தோல்வியுற்ற நிலையில், நீதிக்கட்சியை வலுப்படுத்த, ஊர்ஊராகச் சென்று கூட்டங்களில் பேசினார் பெரியார். அப்போது, சுற்றுப்பயணக் குழுவின் செயலாளர்களாக பெரியாருடன் செ.தெ.நாயகமும் இருந்தார். ‘திராவிடன்’ இதழின் ஆசிரியராகச் சில காலமும், ‘விடுதலை’ நாளிதழின் கௌரவ மேலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

1937-இல் முதல் இந்தி எதிர்ப்புப் போர் வெடித்தபோது, முன்னணி வீரராகத் தன்னையும் இணைத்துக்கொண்டவர் செ.தெ.நாயகம். சென்னையில் இந்தி எதிர்ப்புப் போரை நடத்தவும், அதற்கான நெறிமுறைகளை வகுத்துத் தரவும் பெரியாரால் சர்வாதிகாரியாக நியமிக்கப்பட்டவர் செ.தெ.நாயகம். தியாகராயர் நகரில் இவருக்குச் சொந்தமான இடத்தில் இந்தி எதிர்ப்பு தலைமை நிலையத்தை அமைத்தார். இங்கிருந்துதான் ஈழத்து அடிகள் தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, முதல்வர் இல்லம் நோக்கி நகர்ந்தது. செ.தெ. நாயகம் கைதுசெய்யப்பட்டார். 16.12.1938 அன்று இவர் விடுதலை செய்யப்பட்ட போது, நகரின் முக்கிய வீதிகளில் ஊர்வலமாக பெத்தநாயக்கன்பேட்டைக்கு அழைத்துச்செல்லப்பட்டார். வழியெங்கும் மக்கள் கூடி வரவேற்பு அளித்தனர். பாராட்டு விழாவும் நடைபெற்றது. பின்னர், குடும்பத்துடன் பெரியாரைச் சந்திக்க ஈரோடு புறப்பட்டார். அங்கும் ஈ.வெ.கிருஷ்ணசாமி, ‘விடுதலை’ ஆசிரியர் பண்டிதர் முத்துசாமி பிள்ளை ஆகியோர் தலைமையில் மக்கள் வரவேற்பு அளித்தனர்.

16.07.1939-இல் இராமநாதபுரம் மாவட்ட 3-வது தமிழர் மாநாடு அருப்புக்கோட்டையில் நடைபெற்றது. செ.தெ.நாயகம் திறந்துவைத்த இந்த மாநாட்டில், ‘இலங்கை அரசால் அங்கு தமிழர்களுக்குத் தொல்லை ஏற்பட்டால், அதன் விளைவுகளுக்கு இந்திய அரசும்தான் பொறுப்பு’ என்று கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்து, 10.08.1939-இல் ஈரோடு பெரியார் மாளிகையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், செ.தெ. நாயகம் பேசும்போது, “இலங்கையில் தமிழ் மக்கள் அரசால் கொடுமைப்படுத்தப்படுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது” என்று பேசினார்.

‘தமிழ்நாடு புரோகித மறுப்பு சங்க’த்தின் தலைவர், ‘நாத்திகர் இயக்க’த்தின் துணைத் தலைவராகவும் இருந்துள்ளார். பிறந்த மண்ணிலும் பணியாற்ற வந்த மண்ணிலும் கல்விச்சேவையைத் தொலைநோக்குச் சிந்தனையுடன் ஆற்றிய செ.தெ. நாயகம், ஓய்வுக்காலத்தில் தமிழ்நாடெங்கும் சுற்றிச்சுழன்று, இயக்கத்திற்காகவே வாழ்ந்து மறைந்தார். 13.12.1944-இல் செ.தெ.நாயகம் காலமானபோது, ‘ஆருயிர்த் தோழர் மறைந்தாரே’ என்று ‘குடி அரசு’ இதழில் தலையங்கம் தீட்டினார் பெரியார். ‘திராவிடம் பெற்ற வீரர்’ ஆரியத்தோடு தொடுத்த போர் முடியும் முன்னரே மறைந்தாரே’ என மனமுடைந்தார் அண்ணா.

***குறிப்பு: இவரது சென்னை தியாகராயர் நகர் இல்லத்தில் தான் 09.07.1949 அன்று மணியம்மை-பெரியார் திருமணம் பதிவு செய்யப்பட்டது. (ஆசிரியர்).***

## கட்சி மாறினால் பதவி, பணம்;
# ஜாதி மாறினால் மரணமா?

மயிலாடுதுறை மாவட்டத்தில் சாத்தான்குடி கிராமத்தில் ஜாதி மாறி காதலித்த இளைஞர்களை ஜாதிவெறி உயிர்ப்பலி வாங்கியிருக்கிறது. பட்டியல் இனப் பிரிவைச் சேர்ந்த 19 வயது இளைஞரும் பிளஸ் டூ வகுப்பை முடித்த மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த 17 வயது பெண்ணும் காதலித்துள்ளனர்.

பெண்ணின் பெற்றோர்கள் ஜாதி வெறியுடன் எதிர்ப்பு தெரிவித்து பட்டியல் இனப்பிரிவு இளைஞர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர். பொறையார் காவல் நிலையத்தில் திங்கட்கிழமை இளைஞர் புகார் செய்திருக்கிறார். செவ்வாய்க்கிழமை விடியற்காலை தங்களது மகளைக் காணவில்லை என்றும் பட்டியல் சமூகத்தின் இளைஞர் மீது சந்தேகம் இருப்பதாகவும் பெண்ணின் பெற்றோர்கள் புகார் செய்துள்ளனர். புகார் பதிவு செய்யப்பட்டது. அதே நேரத்தில் காதலர் இருவரும் தூக்கில் தொங்கிய நிலையில் உடல்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.வன்கொடுமை தடுப்பு சட்டத்தில் பெண்ணின் பெற்றோர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜாதி மாறி திருமணம் செய்ய விரும்பினால் அவர்கள் உயிருடனே வாழ முடியாது என்ற கொடூரமான சமூக அமைப்பில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். புரையோடி நிற்கும் இந்த ஜாதி அவலங்களைப் பேசுவதற்கு எந்த அரசியல் கட்சியும் தயாராக இல்லை. கட்சி மாறினால் பதவியும் பணமும் கிடைக்கும். ஜாதி மாறி காதலித்து வாழ விரும்பினால் மரணம் பரிசாக கிடைக்கும். இதுதான் இங்கே சனாதன தர்மம்!

Posted at Egmore RMS,Pathirika Channel, Chennai-08
Date Of Publication - Every Thursday Tamil Weekly Reg.No.tn/cc(S)Dn/459/25-27 Licenced To Post Wpp no.tn/PMG(CCR)/WPP-462/25-27
Puratchi Periyar Muzhakkam Registered With The Registrar Of Newspaper For India Under no.tntam/2002/07776

# பரப்புரைக்கு தயாராகும் சென்னை மாவட்டக் கழகம்!

சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், ஜூலை-5 மாலை 6 மணிக்கு, கழகத் தலைமை அலுவலகத்தில், கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில், தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் முன்னிலையில் நடைபெற்றது.







குரலற்றோரின் குரலாக கருத்தரங்கங்கள் நடத்துவது, தென் மாவட்டங்களுக்கு பரப்புரைப் பயணம் மேற்கொள்வது, பெரியார் பிறந்தநாளை குடும்ப விழாவாக நடத்துவது, சமூக வலைத்தள செயல்பாடுகள், தேர்தல் முடிவுகள், பிரச்சார அணுகுமுறை, நன்கொடை திரட்டுதல், மாநாட்டு சுவரெழுத்து, பயணப் பெயர் பட்டியல் தயாரிப்பு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது.

பரப்புரைப் பயணத்தை சிறப்பாக நடத்துவது குறித்து தோழர்கள் கருத்துகளை வழங்கினர். குறைந்தது 20 தோழர்கள் பயணக்குழுவில் பங்கேற்க வேண்டும், பெண் பேச்சாளர்களும், கலைக்குழுவினரும் இடம் பெற வேண்டும், பயண நோக்கம் குறித்த டீசர்ட்டை தயாரிப்பது, சமூக ஊடகங்களில் ஒவ்வொரு நாள் பயணத்தையும் பல்வேறு நவீன வடிவத்தில் கொண்டு போய் சேர்ப்பது பற்றி விரிவாக ஆலோசிக்கப்பட்டன. உடனுக்குடன் செய்திகளை பதிவேற்றுவதற்கும் குழு ஒன்றை அமைக்க பரிசீலிக்கப்பட்டது. ஒவ்வொரு ஊரிலுல் பயணத்தின் நோக்கத்தில் ஒத்த கருத்துகளைக் கொண்ட ஆதரவு சக்திகளோடு முன்கூடியே தொடர்பு கொண்டு ஆதரவைப் பெறுவது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் நிலவும் அரசியல் குழப்பங்கள் மேலோங்கி உள்ள சூழலில் பெரியாரின் சமுதாயக் கருத்துக்களை மக்களிடம் கொண்டு செல்லும் பரப்புரை நோக்கத்தை தோழர்கள் பாராட்டி வரவேற்றனர். குரலற்றவர்களின் குரலாக அரசியல் அதிகாரத்திலும் சமூக வளர்ச்சியிலும் புறக்கணிக்கப்படும் விளிம்புநிலை சமுதாய பிரிவினரான வண்ணார், நாவிதர், குயவர், ஒட்டர் உள்ளிட்ட பல்வேறு சமூக பிரிவினரின் உரிமைகளுக்கு திராவிடர் விடுதலைக் கழகம் குரல் கொடுக்க முன்வந்ததை தோழர்கள் பாராட்டியதோடு சமூகநீதியின் தேவையையும் அர்த்தத்தையும் இது உணர்த்துகிறது என்று பல தோழர்கள் குறிப்பிட்டனர். பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் நிறைவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் இ.ரா. உமாபதி நிகழ்வுகளை ஒருங்கிணைத்தார்.

தலைமைக் குழு உறுப்பினர் கு. அன்பு தனசேகர், சென்னை மாவட்டச் செயலாளர் இரா. உமாபதி, மாவட்டத் தலைவர்கள் மா. வேழ வேந்தன், சேத்துப்பட்டு இராசேந்திரன், மாவட்ட அமைப்பாளர்கள் ம.கி. எட்வின் பிரபாகரன், ந. தட்சிணாமூர்த்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ப. அருண், தாம்பரம் நகர அமைப்பாளர் அருண் கோமதி, இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் ஜெயபிரகாஷ், இரண்யா, திருவல்லிக்கேணி பகுதித் தலைவர் சு. கோபிநாத், பகுதி அமைப்பாளர்கள் த.நா. சூர்யா, விஜயன், சதீஷ் கண்ணன், தமிழ்நாடு மாணவர் கழகம்: இளவரசன், ஷர்மிளா, குடிஅரசு, நிமிர்வோம் வாசகர் வட்ட ஒருங்கிணைப்பாளர் பிரசாந்த், தோழர்கள் பாரி சிவா, முழக்கம் உமாபதி, சிபி, வாசிமபதம சரவணகுமார், சுரேந்தர், தீபக், ஏசுகுமார், திநகர் லட்சுமணன், திருவல்லிக்கேணி லட்சுமணன், புருஷோத்தமன், அசோக், ஆனந்தி, அஸ்வின், குறளரசி, தினகரன், மயிலை அருண், சஞ்சய், ஜேம்ஸ், மோகன், செந்தில், மாணிக்கம், குமார், சித்தார்த்தன், மஞ்சுநாதன், தாமரை, அகராதி உள்ளிட்ட 70க்கும் மேற்பட்ட தோழர்கள் பங்கேற்றனர்.

தோழர் இரண்யா தனது மகன் அகராதியின் பிறந்தநாள் மகிழ்ச்சியாக கழகத்துக்கு ஒலிபெருக்கியை தனது பரிசாக வழங்குவதாக அறிவித்தார். செம்பாக்கம் ராஜா சங்கர், நுங்கம்பாக்கம் மகேந்திரநாத், ராயப்பேட்டை ஆதன், சோழிங்கநல்லூர் அன்பு சுரேந்தர் ஆகியோர் இயக்கத்தில் இணைந்தனர்.

(சேலம், திருப்பூர் மாவட்டச் செய்திகள் அடுத்த இதழில்..)

# “பெரியாரை படித்ததால் அம்மாவுக்கு மறுமணம் செய்தோம்!”

**கணவனை இழந்த அம்மாவுக்கு அவரது இரண்டு மகன்கள் மறுமணம் செய்து வைக்கும் நூறுசாமி திரைப்படம் வெற்றிகரமாக ஓடிக்கொண்டிருக்கிறது. கணவனை இழந்த பெண் சமூகம் வழியாக சுமக்கும் வலிகளை பார்வையாளர்களிடம் உணர்வுபூர்வமாக கடத்துகிறது இப்படம். இது உண்மையில் நடந்த சம்பவம்.**

**கள்ளக்குறிச்சி மாவட்டம் வலையாம்பட்டு கிராமத்தைச் சார்ந்த சகோதரர்கள் சித்தார்த்தன் மற்றும் விவேக் இந்த புரட்சி திருமணத்தை நடத்தி முடித்திருக்கிறார்கள். இந்தச் சிந்தனைக்கு காரணம் பெரியாரைப் படித்தது தான் என்கிறார் சித்தார்த்தன். இது குறித்து ‘ஆனந்த விகடனில்’ ஜூன் 26 ஆம் தேதி வெளிவந்த பேட்டியில் இருந்து...**

அவள் விகடனில்தான் எங்கள் முதல் பேட்டி வெளிவந்துச்சு. அதைப் பார்த்த பிறகு நிறைய ஊடகங்களில் பேட்டி எடுத்தாங்க. அதையெல்லாம் படிச்சுட்டு டைரக்டர் சசி சார் என்னைக் கூப்பிட்டார். சென்னைக்கு வந்து சாரை சந்திச்சேன். “உங்கம்மாவோட கதையைப் படமா பண்ணலாமா?”ன்னு கேட்டார். அம்மாவுக்கு மகன்கள் கல்யாணம் பண்ணி வெச்சதைப் பலரும் ஒரு செய்தியா கடந்து போனாங்க. ‘அதை ஒரு சினிமாவா எடுக்க முடியும், மக்களைப் பார்க்கவெக்க முடியும்’னு சசி சார் நினைச்சதே எனக்கு வியப்பைக் குடுத்துச்சு. இதோ இன்னைக்கு அம்மாவோட வாழ்க்கைக்கு ‘நூறு சாமி’-ங்கிற பேர்ல சசி சார் உயிர் கொடுத்துட்டார்.”- சித்தார்த்தனின் வார்த்தைகளில் அவ்வளவு நெகிழ்ச்சி.



‘‘எங்களுக்குச் சொந்த ஊர் கள்ளக்குறிச்சி மாவட்டம், வலையாம்பட்டு. நான், தம்பி விவேக், அம்மா, அப்பான்னு சந்தோஷமா வாழ்ந்தோம். அம்மாவும் அப்பாவும் காதல் திருமணம் பண்ணவங்க. அம்மா பேரு செல்வி. பத்தாவது படிச்சிருக்காங்க. டெய்லரிங் பண்ணிக்கிட்டிருந்தாங்க. அப்பா கூலி வேலை பார்த்துக்கிட்டிருந்தார். 2009, டிசம்பர்ல உடல்நலம் சரியில்லாம அப்பா தவறிட்டார். அப்போ நான் முதல் வருஷம் இன்ஜினீயரிங் படிச்சுக்கிட்டிருந்தேன். தம்பி ப்ளஸ் ஒன் படிச்சான். அப்பாவோட இறப்புக்குப் பிறகு அம்மாதான் எல்லாப் பொறுப்புகளையும் சுமந்தாங்க.

**காலேஜ் முடிச்சு, வேலைக்குப் போன பிறகு நானும் தம்பியும் பெரியாரைப் படிச்சோம். எங்களுடைய எண்ணங்கள் மாற்றங்கள் வந்தது.** மத்தவங்களுக்கு அறிவுரை சொல்றது மட்டும் போதுமா, நம்ம அம்மாவுக்கு என்ன செஞ்சிருக்கோம்’னு யோசிக்கவெச்சுது. நானும் தம்பியும் படிப்பு, வேலைன்னு வெளியூர்கள்ல இருந்தோம். அம்மா தனியா இருந்தாங்க. அவங்களுக்கு ஏன் இன்னொரு கல்யாணம் செஞ்சு வெக்கக் கூடாதுன்னு தோணவே அது பத்தி அம்மாகிட்ட பேசினோம்

‘உங்களுக்கென்ன பைத்தியம் பிடிச்சிடுச்சா... ஊர், உலகம் என்ன பேசும், எப்படி ஏத்துக்கும்’னு கேட்டாங்க. ஒருகட்டத்துல இந்தப் பேச்சு அம்மாவோட பெற்றோர், கூடப் பிறந்தவங்கன்னு எல்லாருக்கும் தெரியவந்து எங்ககூட பேசுறதையே நிறுத்திட்டாங்க.

ஒருவழியா அம்மாவை சம்மதிக்கவெச்சோம். தெரிஞ்சவங்க மூலம் ஏழுமலைன்னு ஒருத்தரைப் பத்தித் தெரியவந்தது. பக்கத்து ஊர்தான். பத்து வருஷங்களுக்கு முன்னால் மனைவியை இழந்தவர். ’நீங்க சந்திச்சுப் பேசுங்க. உங்களுக்குச் சம்மதம்னா நாங்க பேசுறோம்னு சொன்னோம். அம்மாவும் அவரும் சந்திச்சுப் பேசினாங்க.) அவங்களுக்குப் பிடிச்சிருந்தது. 2019-ம் வருஷம் எளிமையா கோயில்ல கல்யாணம் நடந்தது. அம்மாவுக்கு இப்படியொரு கல்யாணம் நடந்த விஷயம் தெரிஞ்சு ஊர்க்காரங்க நிறைய பிரச்னை பண்ணாங்க. வீட்டைப் பூட்டிவெச்சாங்க. எங்களை ஊருக்குள்ளயே விடக் கூடாதுன்னு பேசினாங்க. நானும் தம்பியும் அதுக்கெல்லாம் பயப்படலை. அந்த **கிராமத்துல நல்லா படிச்சுட்டு வேலையில இருக்கிறவங்க நாங்கதான். அதனால மத்தவங்க பேச்சையோ நடவடிக்கைகளையோ பொருட்படுத்தலை.** இப்போ நிலைமையெல்லாம் சகஜமாகி, சொந்தக்காரங்க, ஊர்க்காரங்க எல்லாம் வழக்கம்போல பேசறாங்க, பழகறாங்க...” நினைத்ததைச் சாதித்துவிட்ட திருப்தி ஒரு பக்கமும், அம்மாவின் முகத்தில் இழந்த புன்னகையை மீட்டெடுத்த மகிழ்ச்சி ஒரு பக்கமுமாக அண்ணனுக்கும் தம்பிக்கும் அப்படியொரு நிறைவு...” இதுதான் ‘அவள் விகடனில்’ வெளிவந்த அந்தக் கட்டுரை. இவர்களின் கதையை அடிப்படையாக வைத்துத்தான் சசி இயக்கத்தில் விஜய் ஆண்டனி - ஸ்வாஸ்விகா நடிப்பில் வெளியாகியிருக்கும் ’நூறு சாமி’ படம் உருவாகியிருக்கிறது.

# வான்மதி–கந்தசாமி இணையர்களின் சுயமரியாதை மணவிழா!

வான்மதி - கந்தசாமி - இணையரின் சுயமரியாதைத் திருமணம், ஜூலை 5,2026 (ஞாயிறு), பூவிருந்தவல்லி இதயம் மகாலில் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் முன்னிலை வகித்தார். தலைமைக் குழு உறுப்பினர் கு.அன்பு தனசேகர், சென்னை மாவட்டச் செயலாளர் இரா.உமாபதி, இரண்யா ஆகியோர் வாழ்த்துரை



வழங்கினர். மணப்பெண் அக்காவும் கழகத் தோழர்களுமான இணையர்கள் புகழேந்தி- ஸ்ரீலேகா இந்தத் திருமணத்தை எந்தவித சடங்குகளும் இன்றி சுயமரியாதைத் திருமணமாக நடத்த வேண்டும் என்ற முனைப்புடன் நடத்திக் காட்டியுள்ளனர். ஸ்ரீலேகா நன்றியுரையாற்றினார்.

மணமக்கள் புரட்சிப் பெரியார் முழக்கம் இதழுக்கு வளர்ச்சி நிதியாக ரூ. 3,000, பரப்புரைப் பயணத்துக்கு ரூ. 4,000, புத்தகங்களுக்கு ரூ. 1,680 வழங்கினர். இந்நிகழ்வில், மாவட்ட அமைப்பாளர் ம.கி. எட்வின் பிரபாகரன், தோழர்கள் பிரனேஷ், ராகுல், ஹானஸ்ட்ராஜ், நவெந்தன், கார்த்தி ராஜேந்திரன், பாரி சிவா, போரூர் அபிநந்தன், நந்தகுமார், அசோக், திருவல்லிக்கேணி பகுதி அமைப்பாளர் த.நா. சூர்யா ஆகியோர் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : July 09, 2026

Owned and Published By : K. Rajendran, From 29, Journalists Colony, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041. Ph : +91 63697 76351
and Printed By : S. Theesmas, at Lilly Soosai Offset, New No.8, Old No.12/1, Mohammed Usain Lane, Royapettah, Chennai - 600 014.
Editor :K. Rajendran